தமிழ்நாடுபள்ளிக்கல்விஇயக்குநரின்செயல்முறைகள், சென்னை-6.

ந.க.எண்.047393/எம்/இ1/2024, நாள் .08 .08.2024

பொருள்: பள்ளிக்கல்வி - போதை பொருள் பயன்பாடற்ற தமிழ்நாடு - பெருந்திரள் போதை எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றல் - 12.08.2024 அன்று ஒரு கோடிக்கும் அதிக மாணவர்கள் பங்கேற்கும் நிகழ்ச்சி - உரிய ஏற்பாடுகள் மற்றும் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளுதல் - அறிவுரைகள் வழங்குதல் - சார்பு.

பார்வை:

1. அரசுக்கடிதஎண்.efile.7058/GL1(2)/2024-1, dated 25.07.2024.
2. கூடுதல் தலைமைச் செயலர், உள் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை கடித எண்.15526/H.P&E(XVI)/2024-4, நாள்.07.08.2024

*****

போதைப் பொருள் பயன்பாட்டிற்கு எதிரான சமூக விழிப்புணர்வு பெறும் நோக்கில் தமிழ்நாடு அரசால் மேற்கொள்ளப்படும் பல்வேறு நடவடிக்கையின் ஒரு பகுதியாக கடந்த ஆண்டு போதைப் பொருள் எதிர்ப்பு உறுதிமொழி ஏற்றல் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. அதன் தொடர்ச்சியாக, பள்ளி மாணவர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் எதிர்வரும் 12.08.2024 அன்று அனைத்துவகை பள்ளிகளிலும், உயர் மற்றும் மேல்நிலை வகுப்பில் பயின்று வரும் மாணவர்கள் அனைவரும், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள போதைப் பழக்கத்திற்கு எதிரான பெருந்திரள் உறுதிமொழி ஏற்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும், தங்கள் ஆளுகையின் கீழ் உள்ள அனைத்துவகைப் பள்ளிகளில் உறுதிமொழி எடுக்கப்பட்ட நிகழ்வுகளை ஆவணப்படுத்தவும், நிகழ்வில் பங்கேற்ற மாணவர்கள் விவரங்களை, இணைப்பில் கண்டுள்ள படிவம்-1 இல் அனைத்துப் பள்ளிகளிலிருந்தும் பெற்றுமாவட்ட அளவிலான விவரங்களை படிவம்-2 இல் பூர்த்தி செய்து இவ்வியக்ககம் அனுப்பி வைத்திட கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், நிகழ்வின்போதுஎடுக்கப்பட்டபுகைப்படங்கள், Viedo-க்கள்மற்றும்படிவம் -2ஐ dad.ebcid@gmail.com மற்றும் இவ்வலுவலக மின்னஞ்சல்msectndse@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் 12.08.2024 பிற்பகல் 4.00 மணிக்குள் அனுப்பிவைக்குமாறு அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

https://enforcementbureautn.org/pledge என்ற இணைய இணைப்பினை பயன்படுத்தி மின்னணு உறுதிமொழி ஏற்க வசதி செய்யப்பட்டுள்ளது. இதனை பயன்படுத்தி மாணவர்கள் உறுதிமொழி ஏற்பதுடன் உறுதிமொழி எற்றமைக்கான மின்னணு சான்றிதழை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். இத்தகவலை அனைத்து மாணவர்களுக்கும் தெரிவித்து மின்னணு உறுதிமொழி ஏற்க ஊக்குவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

ஆசிரியர்கள் உறுதிமொழியினை ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள் ஏற்றிடவும் அதன் புகைப்படம் (geo camera) மற்றும் Video (geo camera video) மூலம் எடுத்து ஆவணப்படுத்திடவும். உடல் நலத்திற்கு கேடு விளைவிக்கக் கூடிய பொருட்கள் பயன்பாடு தவிர்த்தல் சார்ந்து வல்லுநர்கள் காவல்துறை, சட்டவல்லுநர்கள், மருத்துவர்கள் 10 நிமிடம் உரையாற்றிடவும், மாணவர்களுக்கான பேச்சுப்போட்டி, கவிதைப்போட்டி, Slogan எழுதும்போட்டி, ஓவியப்போட்டி, கலைநிகழ்ச்சிகள் மூலம் விழிப்புணர்வு ஆகியவற்றினை 08.08.2024 மற்றும் 09.08.2024 ஆகிய நாட்களில் மன்ற செயல்பாடுகளில் நடத்தி சிறந்த படைப்புகளைத் தேர்வு செய்து மாணவர்களையும், Anti drug club சிறப்பு செயல்பாடாக செயல்படுத்திடவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேற்கண்ட செயல்பாடுகளை அனைத்து அரசு, நிதி உதவி, தனியார் பள்ளிகளிலும் செயல்படுத்துவதில் முதன்மைக் கல்வி அலுவலர்கள் மற்றும் அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் (இடைநிலை, தொடக்கநிலை, தனியார்) மாவட்ட அளவில் குழுவினை அமைத்து கண்காணித்து உரிய அறிக்கையினை மேலே தெரிவிக்கப்பட்டவாறு 12.08.2024 மாலை 4.00 மணிக்குள் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கப்படுகிறது.

இயக்குநர்

8.8.24

இணைப்பு:

1. உறுதிமொழி - ஒளிநகல் (தமிழ்மற்றும்ஆங்கிலம்)
2. படிவம் -1 2.3. மின்னணுஉறுதிமொழிஇணையபக்கநகல்.

பெறுநர்

1. அனைத்துமாவட்டமுதன்மைக்கல்விஅலுவலர்கள்.
2. அனைத்துமாவட்டக்கல்விஅலுவலர்கள்.

நகல்:

1. கூடுதல் தலைமைச்செயலர் அவர்கள், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை துறை தலைமைச் செயலகம், சென்னை- 9. .(தகவலுக்காகபணிந்துஅனுப்பப்படுகிறது)
2. அரசுசெயலாளர், பள்ளிக்கல்வித்துறை, தலைமைச்செயலகம், சென்னை-9.(தகவலுக்காகபணிந்துஅனுப்பப்படுகிறது)
3. மாநில திட்ட இயக்குநர், ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, சென்னை – 6.
4. தனியார் பள்ளிகள், இயக்குநர், தனியார் பள்ளி இயக்குநரகம், சென்னை - 6.
5. தொடக்க கல்வி இயக்குநர், தொடக்க கல்வி இயக்குநரகம், சென்னை - 6.
6. உறுப்பினர் செயலர், மாதிரி பள்ளிகள், சென்னை - 6.

# PLEDGE AGAINST DRUG ABUSE

I am aware of the ill effects of drug abuse and I solemnly promise not to indulge in drug abuse. I also swear my sincere contribution to prevent and advise my family members and friends not to fall into the habit of drug abuse. I assure to fully contribute for the cause of rescuing and guiding the drug abusers to give up drugs.

I will fully stand with the Government in their fight against the usage, consumption, and manufacturing of illegal narcotic substances in order to eradicate them from Tamil Nadu. I affirm to contribute with utmost dedication towards the growth of the State and welfare of its people.

Thank You.

## போதைப் பழக்கத்திற்கு எதிரான உறுதிமொழி

போதைப் பழக்கத்தால் ஏற்படும் தீய விளைவுகளை நான் முழுமையாக அறிவேன். நான் போதைப் பழக்கத்திற்கு ஆளாகமாட்டேன். மேலும் எனது குடும்பத்தினரையும், நண்பர்களையும் போதைப் பழக்கத்திற்கு ஆளாகாமல் தடுத்து அவர்களுக்கு அறிவுரைகளை வழங்குவேன். போதைப் பழக்கத்திற்குள்ளானவர்களை மீட்டெடுத்து அவர்களை நல்வழிப்படுத்த எனது பங்களிப்பை முழுமையாகத் தருவேன்.

போதைப் பொருட்களின் உற்பத்தி, நுகர்வு, பயன்பாடு ஆகியவற்றிற்கு எதிரான தடுப்பு நடவடிக்கைகளின் மூலம் போதைப் பொருட்களை தமிழ்நாட்டில் வேரறுக்க அரசுக்குத் துணைநிற்பேன். மாநிலத்தின் வளர்ச்சிக்கும் மக்களின் நல்வாழ்விற்கும் நான் அர்ப்பணிப்புடன் பங்காற்றுவேன் என்று உளமார உறுதிகூறுகிறேன்.

நன்றி! வணக்கம்!

Signature and seal of the officer :

Annexure – I

## Institution Format

*(To be filled in the letter head of the institution)*

This is to certify that the pledge against drug abuse led by the Hon'ble Chief Minister of Tamil Nadu has been taken by ____________ number of Students in ________________ School / College / Institute on __________ (date) _________ at ______ (time).

Name of Institution :

Address of Institution :

District :

Name of Head of Institution :

Signature with seal of head of Institution :

# Annexure – II

## District Officer's Format

Name of the District : ______________________________

Department : ______________________________

Today ______ (date)________ at ________ (time) hrs. ________ (total number)________ students of ______________ district have taken Anti-Drug Pledge led by the Hon'ble Chief Minister of Tamil Nadu. The break up detail is as follows:

| Sl. No. | Name of the Institution | | No. of Students taken Anti-Drug Pledge |
|---|---|---|---|
| 1. | | : | |
| 2. | | : | |
| 3. | | : | |
| .... | | : | |
| .... | | : | |
| | Total number of Students taken pledge | : | |

Name of the officer :

6. The details so collected may be sent to Enforcement Bureau CID in the mail ID: dad.ebcid@gmail.com. Photographs and videos of the function may also be sent along with the details to the Nodal Officers Viz Tmt.A.Radhika, IPS., Inspector General of Police, Crime, Office of the Director General of Police, Mylapore, Chennai. (99401 57778).

7. The e-pledge facility is also available at https://enforcementbureautn.org/pledge. Copy of the same is also enclosed.